# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:162 ★12.10.2026 ★தமிழ் நாளிதழ் ★செவ்வாய்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:162 ★12.10.2026 ★TamilDaily ★Tuesday ★Page-4 ★Price-₹5/- Chennai


# தமிழகத்தின் நிரந்தர கவர்னராக அர்லேகர் நியமனம்: ஜனாதிபதி உத்தரவு



தமிழகத்தின் நிரந்தர கவர்னராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழகத்தின் நிரந்தர கவர்னராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை ஜனாதிபதி திரவுபதி முர்மு பிறப்பித்துள்ளார்.

தமிழகத்தின் நிரந்தர கவர்னராக ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அதிகாரப்பூர்வ உத்தரவை ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்டுள்ளார். இதற்கு முன்பு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேரளம் மாநில கவர்னராக பதவி வகித்து வந்தார். கடந்த மார்ச் மாதம் முதல் தமிழகத்தின் பொறுப்பு கவர்னராகவும் அவர் செயல்பட்டு வந்தார். இந்த நிலையில்தான், தற்போது அவர் தமிழகத்தின் நிரந்தர கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அர்லேகர் தமிழகத்திற்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து, சிக்கிம் மாநில கவர்னராக இருந்த ஓம் பிரகாஷ் மாத்தூர் கேரளம் மாநிலத்தின் புதிய கவர்னராக நியமிக்கப்பட்டுள்ளார். இதேபோல ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, சிக்கிம் கவர்னராக துஸ்யந்த் கவுதமும், ஒடிசா கவர்னராகஜார்கண்ட்மாநில பா.ஜ.க. மூத்த தலைவர் பிராஜ் மோகன் ராமும், கர்நாடக கவர்னராக சுதா யாதவும், உத்தரகாண்ட் கவர்னராக தால் சிங் பைசனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



## திருப்பரங்குன்றம் தீபத் தூணில் கார்த்திகை தீபம் ஏற்றக் கோரி சின்னமனூரில் இந்து முன்னணி சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

நீதிமன்ற தீர்ப்பின்படி திருப்பரங்குன்றம் தீபத் தூணில் தீபம் ஏற்ற தமிழக அரசை வலியுறுத்தி, தேனி தெற்கு மாவட்ட இந்து முன்னணி சார்பாக சின்னமனூர் ரவுண்டானாவில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் எழுச்சியுடன் நடைபெற்றது. தேனி தெற்கு மாவட்ட தலைவர் V. சுந்தர் தலைமையிலும், மாவட்ட பொதுச்செயலாளர் R.பாலமுருகன் முன்னிலையிலும் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சின்னமனூர் நகர தலைவர் சுருளிமுத்து வரவேற்புரையாற்றினார். இதில் மதுரை கோட்ட செயலாளர் கோம்பை கணேசன் சிறப்புரையாற்றினார் ஆர்ப்பாட்டத்தில், கார்த்திகை மாதம் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் அமைந்துள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன. மேலும், இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர்கள் ஆச்சி. கார்த்திக், மாய. லோகநாதன், கணேஷ் குமார், ரெங்கசாமி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாண்டியன், கோட்ட இணையதள பொறுப்பாளர் ராம் செல்வா, கூடலூர் நகர தலைவர் பிராசந்த், ஆண்டிபட்டி நகர் மற்றும் ஒன்றியப் பொதுச்செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர மற்றும் கிளை பொறுப்பாளர்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இறுதியாக நகர துணைத்தலைவர் ஆனந்த் நன்றியுரையாற்றினார்.

## "உத்தமபாளையம் அரசு மருத்துவமனை மேம்பாட்டுப் பணிகள்" சட்டமன்ற உறுப்பினர் முன்னிலையில் பொதுமக்கள் மற்றும் அனைத்து அமைப்புகள் பங்கேற்ற ஆலோசனை கூட்டம்!

தேனி மாவட்டம், உத்தமபாளையம் அரசு மருத்துவமனையின் கட்டமைப்பு விரிவாக்கம், மருத்துவர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் தேவை, எக்ஸ்ரே மற்றும் ஸ்கேன் சென்டர் கருவிகள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தேவைகள் குறித்த ஆலோசனை கூட்டம் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. மருத்துவர் பாரதி அவர்களின் முயற்சியின்பேரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கம்பம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெகநாத் மிஸ்ரா அவர்கள் கலந்துகொண்டு அனைவரிடமும் கருத்துக்களை கேட்டறிந்தார். மேலும், அரசு மருத்துவமனைக்காக தான் தனிப்பட்ட முறையில் செய்ய வேண்டிய பணிகளை செய்வதாகவும், அரசாங்கம் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் மாவட்ட ஆட்சியர் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களிடம் நேரில் தெரிவித்து விரைந்து செயல்படுத்த உள்ளதாகவும் அவர் உறுதியளித்தார். மருத்துவமனை விரிவாக்க பணிகளுக்கு அனைத்து அமைப்புகளும் தொடர்ந்து முழுமையான ஒத்துழைப்பு வழங்குவது என ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. இதற்காக 'உத்தமபாளையம் மக்கள் மருத்துவ சேவை குழு' என்ற பெயரில் புதிய குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. இக்குழுவில் பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள் இணைந்து கொண்டனர். இக்குழு மாதத்திற்கு ஒருமுறை கூடி அரசு மருத்துவமனையின் வளர்ச்சி பணிகளுக்காக திட்டமிட்டு செயல்படும் என அறிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் உத்தமபாளையம் நகர நல சங்கம், வைகை வணிகர் சங்கம், எஸ்டிபிஐ (SDPI) மற்றும் மருத்துவ அணி, மனிதநேய மக்கள் கட்சி, ட்ரீஸ் பவுண்டேஷன், மகிழ் பவுண்டேஷன், அனைவர் நலம் நாடுவோம் அறக்கட்டளை, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், சுதந்திர தொழிலாளர் யூனியன், உத்தமபாளையம் ரோட்டரி கிளப், தேனி ரூரல் அப்ளிப்ட்மென்ட் சோசியல் டிரஸ்ட், மருத்துவ சேவை அணி, தமிழ்நாடு முஸ்லிம் முற்போக்கு கழகம், ஸ்வீட் டிரஸ்ட், நன்செய் அறக்கட்டளை, தவெக (TVK) மக்கள் இயக்கம், மற்றும் ராமசாமிநாயக்கன்பட்டி முன்னாள் ஊராட்சி கழகத்தால் தலைவர் பவுன்ராஜ் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் திரளாக கலந்துகொண்டனர்.





## காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள மாணவர்களைத் தயார்படுத்த வேண்டும்! ஆசிரியர்களுக்கு 3 நாள் சிறப்புப் பயிற்சி - திருவண்ணாமலை ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், தண்ணீர் சேமிப்பின் அவசியம், மரம் வளர்ப்பதன் பயன்கள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ள அவர்களைத் தயார்படுத்த வேண்டும் என்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வலியுறுத்தினார்.

திருவண்ணாமலை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகக் கூட்டரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, பள்ளிக் கல்வித்துறை ஆகியவற்றின் சார்பில் ஆசிரியர்களுக்கான மாவட்ட அளவிலான மூன்று நாள் காலநிலைக் கல்வி முன்னெடுப்புப் பயிற்சி நேற்று தொடங்கியது. இதனை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து இப்பயிற்சியை நடத்துகிறது. பள்ளிகளில் சுற்றுச்சூழல் கல்வியை மேம்படுத்துதல், பசுமைப் பள்ளிகளை உருவாக்குதல், அறிவியல் அடிப்படையிலான கழிவு மேலாண்மையைப் பின்பற்றுதல், நீர்நிலைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஆசிரியர்களுக்கு எடுத்துரைப்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும்.

புவி வெப்பமடைதல், மழைநீர் சேகரிப்பு, பல்லுயிர்ப் பெருக்கம், நிலையான வாழ்வியல் முறைகள் உள்ளிட்ட முக்கியக் கருத்துகளை மாணவர்களுக்கு எளிமையாகக் கற்பிக்கும் வகையில் 21 பாடத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் கதைகள், வகுப்பறைச் செயல்பாடுகள், உண்மை நிகழ்வுகள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. இதன் மூலம் தங்கள் பகுதிகளில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளை மாணவர்கள் எளிதில் புரிந்துகொள்ள முடியும். மூன்று நாட்கள் நடைபெறும் இப்பயிற்சியில் கலந்துரையாடல்கள், கதை சொல்லும் முறையிலான கற்பித்தல் பயிற்சிகள், குழுவாகப் பாடத்திட்டங்களை உருவாக்கும் செயல்பாடுகள் ஆகியவற்றின் மூலம் காலநிலைக் கல்வி தொடர்பான பாடத் தொகுப்புகள் ஆசிரியர்களுக்கு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

பயிற்சியைத் தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பேசியதாவது:

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட காலநிலை மாற்றத்தின் தாக்கம் மற்றும் இந்த ஆண்டு எல் நினோ தாக்கம் காரணமாகப் போதிய மழை பெய்யவில்லை. இதனால் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து, பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீரைப் பெறுவதில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சூழலைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு ஆசிரியர்களுக்குக் காலநிலைக் கல்வி முன்னெடுப்புகள் குறித்த பயிற்சியை வழங்குகிறது. இப்பயிற்சியின் மூலம் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், தண்ணீரைச் சேமிப்பதன் அவசியம், மரங்களை வளர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் மற்றும் எதிர்காலத்தில் காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து மாணவர்களுக்கு ஆசிரியர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். பயிற்சியில் பங்கேற்றுள்ள ஆசிரியர்கள் இதனைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்டு, தாங்கள் கற்றுக்கொண்டவற்றை மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் அவசியத்தை இளம் தலைமுறையினருக்கு உணர்த்தி, எதிர்காலச் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் அனைவரும் பங்களிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

தொடர்ந்து, காலநிலைக் கல்வி முன்னெடுப்புப் பயிற்சிக்கான கையேடுகளை ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சியர் வழங்கினார். பின்னர், முதன்மைக் கல்வி அலுவலக வளாகத்தில் மரக்கன்றையும் நட்டு வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மலைவாசன், மாநிலக் கருத்தாளர்கள் அனிஷா, கார்முகில், காவியா, சாய் விக்னேஷ், பூர்ணிமா, பள்ளித் துணை ஆய்வாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ரூ.5.74 லட்சம் மதிப்பில் 12 மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்! மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு மருத்துவப் பரிசோதனை வாகனத்தைத் தொடங்கி வைத்தார் ஆட்சியர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், 12 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,74,785 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் வழங்கினார். மேலும், பெண்களிடையே மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வுப் பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டதுடன், புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவதற்கான மருத்துவப் பரிசோதனை வாகனத்தையும் தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 12.10.2026 அன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், கல்வி உதவித்தொகை, வங்கிக் கடனுதவி, முதியோர் உதவித்தொகை, வீட்டுமனைப் பட்டா, சாதிச் சான்றிதழ், வேலைவாய்ப்பு, விதவை உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை மற்றும் உபகரணங்கள், சாலை வசதிகள், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டம், வேளாண் பயிர்க்கடன், புதிய நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல், தாட்கோ கடனுதவி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பயிர்க்கடன் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 872 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டன. மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு உரிய தீர்வு காணுமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தினார்.



தொடர்ந்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 11 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,71,500 மதிப்பிலான செயற்கைக் கால்களும், ஒரு காதுகேளாத மாற்றுத்திறனாளிக்கு ரூ.3,285 மதிப்பிலான காதொலிக் கருவியும் வழங்கப்பட்டன. மொத்தம் 12 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,74,785 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'பிங்க் அக்டோபர்' நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்புணர்வுப் பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் வெளியிட்டார். மேலும், 30 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு கருப்பைவாய்ப் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் வாய்ப் புற்றுநோய் ஆகியவற்றைத் தடுப்பது, ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது தொடர்பான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்ளும் வாகனத்தையும் தொடங்கி வைத்தார்.

இதற்கிடையே, செய்யாறு சார் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் 134 மனுக்களும், ஆரணி வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் 93 மனுக்களும் பெறப்பட்டன. இம்மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ.சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய்க் கோட்டாட்சியர் செல்வம், தனித் துணை ஆட்சியர் (சமூகப் பாதுகாப்பு) இளவரசன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) இராமகிருஷ்ணன், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் சுஜாதா, திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) செல்வகுமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், உதவி ஆணையர் (கலால்) வளர்மதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மற்றும் இணை இயக்குநர் (பொறுப்பு) மலர்விழி, கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முகுந்தன், மாவட்ட சுகாதார அலுவலர் வெங்கட்ரமணன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாரதா உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பங்காருபேட்டை பெண் விவசாயி மார்கரெட் HJக்கு தேசிய அளவில் அங்கீகாரம்:

# மகிளா கிசான் திவாஸ்2026 நிகழ்ச்சியில் பங்கேற்க கர்நாடக அரசு பரிந்துரை; சாதனைப் பெண் விவசாயிக்கு வாழ்த்துகள் குவிகின்றன

கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டம், பங்காருபேட்டையைச் சேர்ந்த முற்போக்கு சிந்தனையுள்ள பெண் விவசாயியும், வேளாண் தொழில் முனைவோருமான மார்கரெட் HJ, தேசிய அளவில் நடைபெறவுள்ள மகிளா கிசான் திவாஸ் 2026 நிகழ்ச்சியில் பங்கேற்க கர்நாடக அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். விவசாயத்துறையில் பெண்களின் பங்களிப்பையும், அவர்களின் சாதனைகளையும் அங்கீகரிக்கும் வகையில், புதுடெல்லியில் உள்ள கிருஷி பவனில் அக்டோபர் 15, 2026 அன்று நடைபெறவுள்ள இந்த முக்கிய நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக, கர்நாடக மாநிலத்திலிருந்து ஒரு பெண் விவசாயி மற்றும் ஒரு பெண் வேளாண்மை அதிகாரியின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இதன் ஒரு பகுதியாக, சுஜய் பி.வி. அவர்களின் மனைவியான மார்கரெட் HJ அவர்களின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. வேளாண் துறையில் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட்டு வரும் இவர், விவசாயத்தை வாழ்வாதாரமாக மட்டுமின்றி, புதுமைகளைப் புகுத்தி முன்னேற்றம் காணக்கூடிய தொழில்முனைவுத் துறையாகவும் வளர்த்தெடுத்து வருகிறார். இவரது விவசாயப் பணிகள், சாதனைகள் மற்றும் புதுமையான வேளாண் நடைமுறைகள் பல்வேறு புகழ்பெற்ற நிறுவனங்களின் பாராட்டையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளன. பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ள மார்கரெட் HJ அவர்களின் சாதனைகள், விவசாயத் துறையில் பெண்கள் தங்களுக்கெனத் தனி அடையாளத்தை உருவாக்க முடியும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. கர்நாடகஅரசின்வேளாண் ஆணையரகம் வெளியிட்டுள்ள பரிந்துரைத் தகவலின்படி, மார்கரெட் HJ



அவர்களின் விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, அவர் உண்மையாகவும் தீவிரமாகவும் விவசாயத்தில் ஈடுபட்டு வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவரது சாதனைகளும் பங்களிப்புகளும் கள அளவில் சரிபார்க்கப்பட்டதன் அடிப்படையில், 2026 மகளிர் விவசாய தின நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மாநில அரசால் அவர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார். பங்காருபேட்டையைச் சேர்ந்த பெண் விவசாயி தேசிய அளவிலான நிகழ்ச்சியில் பங்கேற்கப் பரிந்துரைக்கப்பட்டிருப்பது, கோலார் மாவட்டத்திற்கும் கர்நாடக மாநிலத்திற்கும் பெருமை சேர்க்கும் செய்தியாக அமைந்துள்ளது. விவசாயத்தில் பெண்களின் உழைப்பையும் திறமையையும் அங்கீகரித்து, அவர்களின்சாதனைகளை தேசிய அளவில் எடுத்துச் செல்லும் இந்த வாய்ப்பு, மார்கரெட் HJ அவர்களின் விவசாயப் பயணத்தில் முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தச் சிறப்பான அங்கீகாரத்தைப் பெற்றுள்ள மார்கரெட் HJ அவர்களுக்கு விவசாயிகள், வேளாண் துறையினர், சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் தங்களது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர். அவரது விவசாயப் பணிகள் மேலும் வளர்ச்சி பெறவும், புதிய சாதனைகளைப் படைக்கவும், பங்காருபேட்டை, கோலார் மாவட்டம் மற்றும் கர்நாடக மாநிலத்திற்குத் தொடர்ந்து பெருமை சேர்க்கவும் வாழ்த்துகள் குவிகின்றன.

பெண்களின் உழைப்புக்கு அங்கீகாரம்! விவசாயத்தில் சாதனை படைக்கும் பெண்களுக்கு ஊக்கம்! பங்காருபேட்டையின் பெருமையாகத் திகழும் மார்கரெட் HJ அவர்களுக்கு மனமார்ந்த பாராட்டுகளும் வாழ்த்துகளும்!



# எரியோடு அருகே குளத்தில் சட்ட விரோதமாக மண் திருடிய 2 பேர் கைது; JCB, டிப்பர் லாரி பறிமுதல்

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் DSP. சுரேஷ் பாண்டியன் அவர்களுக்கு கிடைத்த தகவலை தொடர்ந்து எரியோடு காவல் நிலைய ஆய்வாளர் வினோதா சார்பு ஆய்வாளர் பாலசுப்பிரமணி மற்றும் காவலர்கள் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது எரியோடு, அம்மாபட்டி புதூர், நொச்சிப்பட்டி, புது குளத்தில் அரசு அனுமதியின்றி சட்ட விரோதமாக மண் திருடிய

கூவக்காபட்டி, கவுண்டச்சிப்பட்டியை சேர்ந்த செல்வகுமார்(42), சுக்காம்பட்டி, காமாட்சிபுரத்தை சேர்ந்த மணிவாசகம்(33) இரண்டு பேரை கைது செய்து அவர்களிடமிருந்து 1 JCB 1 டிப்பர் லாரி ஆகியவற்றை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காவல்துறையின் பொலிரோ ஜீப் மோதி 2 பேர் படுகாயம்



திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் காவல்துறையின் பொலிரோ ஜீப் மோதி சென்னமநாயக்கன்பட்டியை சேர்ந்த தண்டபாணி(50), செல்லப்பாண்டி(35)ஆகியஇருவர் படுகாயம் போலீசார் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் இரண்டு பேரையும் மீட்டு சிகிச்சைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்



திண்டுக்கல் மாவட்டம் பழனி வர்த்தக சங்கம் சார்பில் Upi பரிவர்த்தனைக்கு வரி விதிப்பதற்கு தமிழ்நாடு வணிகர் சங்க சார்பாகவும் பழனி வர்த்தக சங்க சார்பாகவும் சேர்ந்து எதிர்ப்பு தெரிவித்து பத்திரிகையாளர்களுக்கு மற்றும் மீடியாக்களுக்கும் சந்திப்பு நடத்தி தங்கள் எதிர்ப்பே தெரிவித்த போது எடுத்த படம்

## தேசபக்தி நாளிதழ் செய்தி எதிரொலி:

# செங்குன்றம் அருகே நடைபெறும் மழைநீர் கால்வாய் பணியினால் உயிரிழப்பு ஏற்படும் அபாயம்

## நெடுஞ்சாலைத்துறை பொதுமக்களின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சமூக ஆர்வலர்கள் கோரிக்கை





சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ள செங்குன்றம் நெல் அரிசி வணிகர் சங்க திருமண மண்டபம் சர்வீஸ் சாலையில் மழை நீர் கால்வாய் பணிக்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் கம்பி அமைக்கும் பணி நடைபெறும் இடத்தில் எந்தவித முன்னறிவிப்பு போர்டும் இல்லாமலும், பள்ளத்தின் பக்கவாட்டில் எந்த ஒரு தடுப்பும் இல்லாமல் திறந்து வெளியில் இருப்பதால் உயிரிழப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக தேசபக்தி நாளிதழில் செய்தி வெளியிட்டிருந்தோம்.

இச்செய்தியை அறிந்த நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மூன்று பேரிகார்டுகள், சிகப்பு கலர் டேப் கட்டி வைத்துள்ளனர்.

இதனால் எந்தவித பிரயோஜனமும் இல்லை. எனவே பள்ளங்களின் ஓரங்களில் பேரிகார்டு, ஒளிரும் பட்டை உள்ளிட்டவைகளை முறைப்படி அமைத்து பொதுமக்களின் உயிரிழப்பை தடுக்க முயற்சி மேற்கொள்ள வேண்டுமென்று சமூக ஆர்வலர்கள் எதிர்பார்க்கின்றனர்.

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ப்ரியா ரவிச்சந்திரன், தலைமையில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.10.2026) மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற திங்கள் கிழமை மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்தும், மாற்றுத்திறனாளிகளிடமிருந்தும் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு குறைகளை கேட்டறிந்தார்கள்.

மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து வருவாய்த் துறை நிலப்பட்டா குறைகள், பட்டா மாறுதல், இலவச வீட்டு மனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை வேளாண்மைத்துறை, காவல்துறை. ஊரக வளர்ச்சித்துறை. நகராட்சி நிர்வாகங்கள், பேரூராட்சித்துறை. கூட்டுறவு, மின்சாரத்துறை சார்பான குறைகள், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை. கிராம பொதுப் பிரச்சனைகள், குடிநீர் வசதி, வேலை வாய்ப்பு வேண்டி மனுக்கள் மற்றும் பொதுநலன் குறித்த 411 மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெற்றுக்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள்மீது உரிய விசாரணை மேற்கொண்டு தகுதியானதாக இருப்பின் உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் மற்றும் மனு நிராகரிப்பிற்கான காரணங்களையும் மனுதாரர்களுக்கு வழங்கிட வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்கள். துறை

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ந.சரவணன், திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி.ச.செல்வராணி, சமூக பாதுகாப்பு திட்டம் தனித் துணை ஆட்சியர் திருமதி.கீதாலட்சுமி, நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி. சுமதி. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திருமதி. மீனா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல அலுவலர்திருமதி. பூமா, மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.பன்னீர் செல்வம், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திருமதி.செந்தில் குமாரி மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது,**

**தேனி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 16.10.2026 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.**

**தேனி மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் அந்தந்த வட்டாரத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை திட்டங்கள் குறித்த கோரிக்கைகளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் மனுக்களாக வழங்கலாம்.**

**விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி அதன்மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள், இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

# திருவண்ணாமலை மாநகராட்சி டேங்க் ஆபரேட்டர்களுக்கு ஊதிய உயர்வு, பொங்கல் போனஸ் வழங்க வேண்டும்

## ஆணையாளரிடம் சங்கத்தினர் மனு



திருவண்ணாமலை மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்ட 18 ஊராட்சிகளில் பணியாற்றும் குடிநீர்த் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும், மாநகராட்சி டேங்க் ஆபரேட்டர்களுக்கும் பொங்கல் போனஸ் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தி, திருவண்ணாமலை மாநகராட்சி ஆணையாளரிடம் எல்லை விரிவாக்க டேங்க் ஆபரேட்டர்கள் பணியாளர்சங்கத்தினர்மனு அளித்தனர்.

திருவண்ணாமலை மாநகராட்சிஎல்லைவிரிவாக்க டேங்க் ஆபரேட்டர்கள் பணியாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் சம்பத் தலைமையில், சங்க நிர்வாகிகள் மாநகராட்சி ஆணையாளரைச் சந்தித்து கோரிக்கை மனுவை அளித்தனர்.

அந்த மனுவில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை மாநகராட்சியுடன் 18 ஊராட்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஊராட்சிகளில் பணியாற்றி வரும் குடிநீர்த் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்துடன் ஒப்பிடும் போது, மாநகராட்சியில் பணியாற்றும் டேங்க் ஆபரேட்டர்களுக்குக் குறைவான ஊதியம் வழங்கப்படுகிறது. எனவே, பணியாளர்களின் பணிச்சுமை மற்றும் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு, மாநகராட்சி டேங்க் ஆபரேட்டர்களின் ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும்.

மேலும், வரும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டுமாநகராட்சிடேங்க் ஆபரேட்டர்களுக்கும் போனஸ் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து, உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு

இந்த நிகழ்வின்போது, சங்கத்தின் மாவட்ட நிர்வாகிகளும் அறிமுகப்படுத்தப்பட்டனர். மாவட்டச் செயலாளராக வெங்கடேசன், மாவட்டத் தலைவராக அருண்குமார், மாவட்டப் பொருளாளராக ஜெகதீசன், துணைச் செயலாளராக ஆனந்தன், துணைத் தலைவராக ரவி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மேலும், செயற்குழு உறுப்பினர்களாக வெங்கடேசன், முருகன், ராமஜெயம், துரைக்கண்ணு, சுபாஷ் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

ஊதிய உயர்வு மற்றும் பொங்கல் போனஸ் கோரிக்கைகள் தொடர்பாகமாநகராட்சிநிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கத்தினர் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ் நாடு மின்சார வாரியம், பழநி கோட்டத்திற்குட்பட்ட 110/22 கிவோ தாழையூத்து துணை மின் நிலையத்தில் எதிர் வரும் 14.10.2026ம் தேதியன்று பராமரிப்பு பணி நடைபெற இருப்பதால் அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை தாழையூத்து துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான:

- ★தாழையூத்து
- ★ போதுபட்டி
- ★ மொட்டணூத்து
- ★அக்கரைப்பட்டி
- ★நரிக்கல்பட்டி
- ★சுக்கமநாயக்கன்பட்டி
- ★ சுப்பநாயக்கன்பட்டி
- ★ வி.கே.மில்ஸ்
- ★ சித்திரைகுளம்
- ★ லட்சலப்பட்டி
- ★தாதநாயக்கன்பட்டி
- ★ குமாரபாளையம்
- ★ பிரகாசபுரம்
- ★ வன்னியர்வலசு
- ★ மிடாபாடி
- ★ முத்துநாயக்கன்பட்டி

# பழனியில் பணம் வைத்து சூதாடிய 11 பேர் கைது; ரூ.1,10,000 பணம் பறிமுதல்

திண்டுக்கல் மாவட்டம் பழனி நகர்காவல் நிலைய ஆய்வாளர் தங்க முனியசாமி தலைமையிலான போலீசார் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த போது

பழனி to பொள்ளாச்சி பைபாஸ் சாலை அருகே சட்டவிரோதமாக பணம் வைத்து சூதாடிய கார்த்திகேயன்(32) உள்ளிட்ட 11 பேரை போலீசார் சுற்றி வளைத்து பிடித்து அவர்களிடமிருந்து ரூ.1,10,000 பணத்தை பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்

# கடப்பேரி என் மீட்பர் தேவாலயத்தில் 47வது ஆண்டு விழா



இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை அடுத்த கடப்பேரி கிராமத்தில் இந்திய சுவிசேஷ திருச்சபை சென்னை பேராயத்தின் கீழ் செயல்பட்டு வரும் என் மீட்பர் தேவாலயத்தின் 47வது ஆண்டு விழா மற்றும் ஆலய விரிவாக்கப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா சிறப்பு ஆராதனையுடன் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கடப்பேரி ஏரியா இயக்குனர் ஜோசப் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். விழாவில் சென்னை பேராயர் கதிரொளி மாணிக்கம் கலந்து கொண்டு சிறப்பு தேவச்செய்தி வழங்கினார்.

தொடர்ந்து, ஆலய விரிவாக்கப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டி ஆசீர்வதித்தார். இவ்விழாவில் கடப்பேரி சபை போதகர் அன்பு, ஏரியா போதகர்கள், மூப்பர் குழுவினர் மற்றும் திரளானசபைவிசுவாசிகள் தங்களது குடும்பத்தினருடன் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

# திண்டுக்கல்லில் சொந்த பயன்பாட்டு வாகனத்தை வாடகைக்கு இயக்கியதால் சிறைபிடித்து போக்குவரத்து அலுவலரிடம் ஒப்படைப்பு

திண்டுக்கல் தமிழ்நாடு வாணிப கழகம் அதிகாரிக்கு ஒப்பந்த முறையில் சொந்த பயன்பாட்டு வாகனம் பயன்படுத்தப்பட்டு வந்தது இது குறித்து திண்டுக்கல் உரிமை குரல் ஓட்டுநர்கள் தொழிற்சங்கம் சார்பாக இரண்டு முறை புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்காததால் இன்றுஉரிமை குரல் ஓட்டுநர்கள் தொழிற்சங்கத்தினர் தமிழ்நாடு வாணிபக் கழக அதிகாரிக்கு பயன்படுத்தப்படும் வாகனத்தை பிடித்து திண்டுக்கல் வட்டார போக்குவரத்து அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.





மேலும் இது குறித்த அவர்கள் மாவட்ட நிர்வாகம் மற்றும் வட்டாரப் போக்குவரத்து துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து எங்கள் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் போராட்டத்தில் ஈடுபடுவோம் அதே போல் நாங்களும் டூரிஸ்ட் வாகனபதிவைநீக்கிவிட்டு சொந்த வாகனத்தின் மூலமே இயக்குவோம் என்று தெரிவித்தனர்

# ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைக் கைவிடக் கோரி செய்யாறில் மின்வாரிய ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மின்வாரிய அலுவலகம் முன்பு, ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



இந்த ஆர்ப்பாட்டத்துக்குதமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் கோட்டத் தலைவர் மாரிமுத்து, திட்டத் தலைவர் வெங்கடேசன் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநிலத் துணைப் பொதுச்செயலாளர்காங்கேயன், மண்டலச்செயலாளரும் மாநிலத் துணைத் தலைவருமான பாலாஜி ஆகியோர்சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்துகொண்டு கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

ஆர்ப்பாட்டத்தில், அனைத்து தரப்பு மக்களின்வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும், மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் மின் கட்டமைப்புகளைத் தனியாரிடம் ஒப்படைக்கும் அரசுதனியார் பங்களிப்புத் திட்டத்தை (PPP) கைவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேலும், ஐந்தாண்டு ஒப்பந்த அடிப்படையில் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள FTE நடைமுறையைச் செயல்படுத்தக் கூடாது என்றும், பி.பி. 2 ஆணையின் தொடர்புடைய சரத்தைத் திரும்பப் பெற வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மின்வாரியத்தைத் தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளைக் கைவிட்டு, பொதுத்துறை நிறுவனமாகத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. மின்வாரியத்தின் பொதுத்தன்மையைப் பாதுகாக்கவும், தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கோரிக்கைகளைநிறைவேற்றவும் வலியுறுத்தி இந்தக் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிக்கு தேர்வான செங்குன்றம் மாணவர் பிரணேஷூக்கு மாமன்ற உறுப்பினர் ராஜன் பர்னபாஸ் நிதியுதவி

சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் டிராம்ப்ளிங் போட்டியில் பங்கேற்கத் தேர்வாகியுள்ள மாதவரம் தொகுதி செங்குன்றத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர் பிரணேஷுக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி 23வதுர் வார்டு மாமன்ற உறுப்பினரும், சிஎம்டிஏ உறுப்பினருமான ராஜன் பர்னபாஸ் நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளார். செங்குன்றத்தைச் சேர்ந்த ஹரி – சிவசங்கரி தம்பதியரின் மகனான பிரணேஷ், வேலம்மாள் பள்ளியில் 7ஆம் வகுப்பு பயின்று வருகிறார். சிறுவயது முதலே ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் டிராம்ப்ளிங் விளையா ட்டுகளில் ஆர்வம் கொ ண்ட இவர், மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளார்.



தற்போது சர்வதேசப் போட்டியில் பங்கேற்கத் தேர்வாகியுள்ள பிரணேஷ், போட்டியில் பங்கேற்பதற்குத் தேவையான செலவுகளுக்காக நிதியுதவி கோரி மாமன்ற உறுப்பினர் ராஜன் பர்னபாஸை நேரில் சந்தித்தார். இதையடுத்து, மாணவரின் விளையாட்டுத் திறமையை ஊக்குவிக்கும் வகையில் ராஜன் பர்னபாஸ் நிதியுதவி வழங்கினார். மேலும், தமிழக விளையாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனாவிடம் மாணவர் பிரணேஷை நேரில் அழைத்துச் சென்று, அரசுத் தரப்பிலிருந்து கூடுதல் உதவிகளைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வென்று, இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்க்கும் வகையில் மாணவர் பிரணேஷ் தொடர்ந்து சாதிக்க வேண்டும் என வாழ்த்துகள் தெரிவித்தார்.

# பாடியநல்லூர் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் தொடர் மின்தடை மின்வாரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுப்பார்களா?

மாதவரம் தொகுதிக்குட்பட்ட பாடியநல்லூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தொடர் மின்தடை ஏற்பட்டு வருவதனால் பொதுமக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

நேற்று (12.10.2026) மதியம் 2 மணி முதல் 5 மணிக்குள் 4 தடவை தொடர் மின்தடை ஏற்பட்டதோடு, இரவு நேரங்களில் அவ்வப்பொழுது மின்தடை ஏற்படுவதும் பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதனால் பகல் முழுவதும் கொளுத்துகின்ற வெயிலினால் வெளியே செல்ல முடியாதோர், வீட்டில் ஓய்வு எடுக்கும் முதியோர்கள், குழந்தைகள், பெண்கள் மிகுந்த அவதிக்குள்ளாகினர். பலரும் வீட்டின் வாசற்படியிலும், தெருவிலும் உலாத்திக் கொண்டிருந்தனர். அதோடு இப்பகுதிகளில் உள்ள சிறு குறு தொழில்முனைவோர் தொழிலும் பாதிக்கப்படுவதாக கூறப்படுகின்றது.





பாடியநல்லூர் உள்ளிட்ட பகுதிகளில் ஆளும் அரசான தவெகவுக்கு அதிகமானோர் வாக்களித்திருந்தனர். அவர்களில் பெரும்பாலோனோர் ஆளும் அரசுக்கு வாக்களித்தமைக்காக மின்வெட்டு குறித்து அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். இந்தத் தொடர் மின்வெட்டை மின்வாரிய அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பொதுமக்களும்சமூகஆர்வலர்களும்கோரிக்கை விடுத்துள்ளனர்.



பழனி அடுத்து உள்ள பெரியம்மா பட்டி, இரவி மங்கலம், ஆண்டிப்பட்டி பகுதிகளில் உள்ள அரசு உபரி நிலங்களில் விவசாயம் செய்யும் விளைநிலங்களுக்கு பட்டா வழங்க கோரி அப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தொடர் கோரிக்கை வலியுறுத்தி வந்தனர். ஆனால் பட்டா வழங்காததைகண்டித்து நேற்று பழனி கோட்டாட்சியர் அலுவலகம் முன்பு அமர்ந்து முற்றுகை போராட்டம் செய்தனர். போராட்டத்தில் தமிழ்நாடு உழவர் பாதுகாப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் காளிமுத்து செய்தி தொடர்பாளர்காளிதாஸ் உழவர் உரிமை இயக்க மாநிலதலைவர் அருள் ஆறுமுகம் உள்பட பலர்கலந்து கொண்டனர் அதைத்தொடர்ந்து வட்டாட்சியர்மங்கல பாண்டியன் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் வந்து போராட்டம் நடத்திய பொது மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி இந்த சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியதை தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.





திண்டுக்கல்மாவட்டம்பழனிசிறுதண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலுக்கு சொந்தமான பேட்டரி கார் பக்தர்களை பழனிமலை கிரிவியை சுத்தி பேட்டரி காரில் முருக பக்தர்கள் கிரிவலம் வருவதற்கு பயன்படுத்திக் கொள்ளலாம் ஆகையால் ஒரு பேட்டரி கார் திடீரென பழுதானது அது மட்டும் இல்லாமல் அவ் வாகனத்தில் இருந்து திடீர் புகை கிளம்பியது இதனால் உடனடியாக அவ்வாகனத்தை தனிமைப்படுத்தி புகைய அனைத்து அந்த வாகனத்தை பழுது நீக்கும் இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது

# செங்குன்றம் ஸ்ரீஅங்காளம்மன் திருக்கோயில் நவராத்திரி திருவிழா



மாதவரம் தொகுதி செங்குன்றம் மேட்டுத்தெருவில் அமைந்துள்ள ஸ்ரீஅங்காளம்மன் திருக்கோயில் நவராத்திரி திருவிழாவும் அதனைத் தொடர்ந்து 10 ஆம் நாள் 18ஆம் ஆண்டு மஹா சண்டி ஹோமம் நிகழ்ச்சியும் ஆலய நிர்வாகிகள், கிராம பொதுமக்கள் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நவராத்திரி பூஜையின் முதல் நாள் மது, கைடபர் என்னும் அசுரர்களை வதம் செய்த துர்க்கை அம்மன் ரூபத்தில் அலங்காரம் அமைந்திருந்தது.

முதல் நாள் உபயதாரர்களான S.S. ரகு மகேஸ்வரி, T.துரை சகுந்தலா, D.சிவக்குமார் சரளா, M.சம்பத் மோகனா, V.K. ராஜ் , M.சுரேஷ், P.தீனதயாளன் D.தமிழரசி, M.கோவிந்தராஜ் சாந்தி, E.தீனா வளர்மதி ஆகியோர் குடும்பத்தினரின் உறுதுணையோடு நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது.

உபயதாரர்களுக்கு ஆலய நிர்வாகம் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. ஆலயம் சார்பில் அன்னதானமும் நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்டம், நாகவேடு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவிகள் சி.சாருலதா, கு.கோபிகா, மு.முபினா, பி. ஹேமலதா ஆகியோர் சுவர்பந்து (Squash) போட்டியில் மாநில அளவில் பங்குபெற்றதையடுத்து, இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன்,இ.ஆ.ப, அவர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

# திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் சின்னாளப்பட்டி அருகே செட்டியபட்டி, KPT நகர் பொதுமக்கள் மனு

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சின்னாளப்பட்டி அருகே செட்டியபட்டி, KPT நகர் பொதுமக்கள் மனு அளித்தனர் அந்த மனுவில்

50க்கும் மேற்பட்ட குடும்பங்கள் சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வருகிறோம். இங்கு இரண்டு மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள் பயன்பாட்டுக்கு உள்ளன இந்நிலையில் கடந்த 2024 ஆம் ஆண்டு மாரிமுத்து என்பவர் குடிநீர் தொட்டி உள்ள இடத்தில் இடம் வாங்கி வீடு கட்டி உள்ளார்.

இந்நிலையில் தற்போது மாரிமுத்து குடிநீர்



மேல்நிலை நீர் தேக்க தொட்டி எனது இடத்தில் உள்ளது என்றும் யாரும் குடிநீர் ஏற்றக்கூடாது என்றும் தொடர்ச்சியாக தகராறு செய்து வருகிறார்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் மற்றும் அதிகாரிகள் தலையிட்டு மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன்வாலாஜா சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதியின் செயல்பாடுகள் குறித்து திடீர் ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப, அவர்கள் வாலாஜா சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதியின் செயல்பாடுகள் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டார்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (12.10.2026) வாலாஜா வட்டம், தென்கடப்பந்தாங்கல் ஊராட்சியிலுள்ள சமூக நீதி கல்லூரி மாணவியர் விடுதியின் செயல்பாடுகள் குறித்து திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வினில் சமையலறையில் மாணவிகளுக்கு காலை உணவு சமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டு, உணவின் தரத்தினை சாப்பிட்டு பார்த்து ஆய்வு செய்தார். பின்னர். உணவுப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்த இருப்பறையில் பார்வையிட்டு உணவுப் பொருட்களின் தரம், இருப்பளவை ஆய்வு செய்தார்.

பின்னர். மாணவியர்களின் தங்கும் அறை, படிக்கும் அறை, கழிவறை, விடுதி வளாகம் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து, விடுதியினை எப்பொழு



தும் சுத்தமாக பராமரிக்குமாறு அறிவுருத்தினார். மாணவியர்கள் நல்ல முறையில் உயர் கல்வி பயின்று தங்களின் பெற்றோர்களின் கனவை நினைவாக்க வேண்டுமென மாணவிகளுக்கு அறிவுருத்தினார்.

தொடர்ந்து, தென்கடப்பந்தாங்கல் ஊராட்சி, அம்மனந்தாங்கல் கிராமத்தில் VBG RAMG திட்டத்தின் கீழ் ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டில் 125 நாள் வேலை பணியாளர்கள் ஏரி நீர்வரத்துக் கால்வாய் தூர் வாரும் பணியில் ஈடுபட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்குமாறு அறிவுருத்தினார். பின்னர், பெல்லியப்பா நகர் நியாய விலைகடையில் உணவுப் பொருட்களின் தரம், இருப்பளவு பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். குறித்து பின்னர், வாலாஜா நகராட்சி, மகாத்மா காந்தி பூங்காவில் பராமரிப்புப் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பூங்காவில் உள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடினார்.

இந்த ஆய்வுகளில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.சிவகுமார். திரு. பிரபாகரன், வட்டாட்சியர் திரு.பன்னீர் செல்வம் மற்றும் பலர் கொண்டனர்.

# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள்



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக மக்கள் குறைதீர்க்கும் நாள் பல்நோக்கு கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டு அதற்கு உரிய தீர்வு காண சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் கே.வி.ராஜ்குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) வெங்கடேசன், கூடுதல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) சாந்தமூர்த்தி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) வேல்முருகன், மாவட்ட வழங்கல் அலுவலர் முத்துலட்சுமி மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# செய்யாறு அருகே கிரஷர் லாரி மோதி விவசாயி பலி

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே கிரஷர் லாரி மோதிய விபத்தில் பைக்கில் சென்ற விவசாயி பலத்த காயமடைந்து உயிரிழந்தார்.

செய்யாறு அருகே உள்ள பெரிய வேலிய நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த அப்பாண்டை (65), விவசாயி. இவர் நேற்று மதியம் சுமார் 2 மணியளவில் தனது சொந்த வேலை காரணமாக இருசக்கர வாகனத்தில் செய்யாறு நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.



அப்போது காஞ்சிபுரத்திலிருந்து செய்யாறு நோக்கி வந்த கிரஷர் லாரி, அப்பாண்டை ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. இதில் அவர் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தார்.

விபத்தைப் பார்த்த அப்பகுதியினர் உடனடியாக அவரை மீட்டு, சிகிச்சைக்காக செய்யாறு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். இருப்பினும், சிகிச்சை பலனின்றி சிறிது நேரத்திலேயே அப்பாண்டை உயிரிழந்தார்.

இதுகுறித்து அளிக்கப்பட்ட புகாரின் பேரில் செய்யாறு காவல் துறையினர் வழக்குப் பதிவு செய்து, விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கிரஷர் லாரி மோதியதில் விவசாயி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் கீழ்

# பயன்பெற்ற திருவண்ணாமலை மாவட்ட பயனாளிகள் தாய்மார்கள் முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு நெஞ்சார்ந்த நன்றி

தாய்மையின் பெருமையையும், குழந்தைப் பிறப்பின் மகத்துவத்தையும் வலியுறுத்தும் வகையிலும், அரசு மருத்துவமனைகளில் நடைபெறும் பிரசவங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கிலும், அரசு மருத்துவமனைகள் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் வகையிலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாநிலம் முழுவதும் தங்க மோதிரங்கள் வழங்கும் இத்திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் 28.09.2026 அன்று தொடங்கி வைத்தார்கள். மேலும் 22.06.2026 அன்று அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிறக்கும் அனைத்து உயிருடன் பிறந்த குழந்தைகளுக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயனடைய, கர்ப்பிணித் தாய்மார்கள் தங்களது கர்ப்பத்தைப் பதிவு செய்து RCH ID பெற்றிருப்பதுடன், eKYC செய்யப்பட்ட ஆதார் அட்டையையும் வைத்திருக்க வேண்டும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் இத்திட்டத்தின் கீழ் அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை (GTVMCH), செங்கம் அரசு மருத்துவமனை, ஆரணி அரசு மருத்துவமனை, செய்யாறு அரசு மருத்துவமனை ஆகிய இடங்களில் தங்க மோதிரங்கள் வழங்குவதற்காக நான்கு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் தகுதியுடைய அனைத்துத் தாய்மார்களும் மேற்கண்ட மையங்களுக்கு வரவழைக்கப்பட்டு, அவர்களின் பயோமெட்ரிக் விவரங்கள் சரிபார்க்கப்பட்ட பின்னர், தகுதியுடைய பயனாளிகளுக்குத் தங்க மோதிரங்கள் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலை சுகாதார மாவட்டத்தில் வட்டார வாரியாக வழங்கப்பட்ட தங்க மோதிரங்களின் எண்ணிக்கை(22.06.2026முதல்27.09.2026 வரை 10.10.2026 நிலவரப்படி செங்கம் மையத்திற்குட்பட்ட செங்கத்தில் 401 தாய்மார்களுக்கும், புதுப்பாளையத்தில் 231 தாய்மார்களுக்கும், ஜவ்வாதுமலையில் 151 தாய்மார்களுக்கும், திருவண்ணாமலை மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மையத்திற்குட்பட்ட சேத்துப்பட்டில் 157 தாய்மார்களுக்கும், கலசபாக்கத்தில் 267 தாய்மார்களுக்கும், கீழ்பென்னாத்தூரில் 303 தாய்மார்களுக்கும், போளூரில் 292 தாய்மார்களுக்கும், தண்டராம்பட்டில் 439 தாய்மார்களுக்கும், திருவண்ணாமலையில் 414 தாய்மார்களுக்கும், துரிஞ்சாபுரத்தில் 257 தாய்மார்களுக்கும், திருவண்ணாமலை நகராட்சியில் 155 தாய்மார்களுக்கும் என மொத்தம் 3067 தாய்மார்களுக்கும், செய்யாறு சுகாதார மாவட்டத்தில் வட்டார வாரியாக வழங்கப்பட்ட தங்க மோதிரங்களின் எண்ணிக்கை




(22.06.2026 முதல் 27.09.2026 வரை 10.10.2026 நிலவரப்படி அரணி அரசு மருத்துவமனை மையத்திற்குட்பட்ட ஆரணி நகர்ப்புறத்தில் 67 தாய்மார்களுக்கும், ஆரணி (கிழக்கு) 196 தாய்மார்களுக்கும், ஆரணி (மேற்கு) 168 தாய்மார்களுக்கும், செய்யாறு அரசு மருத்துவமனை மையத்திற்குட்பட்ட அனக்கவூரில் 184 தாய்மார்களுக்கும், செய்யாற்றில் 183 தாய்மார்களுக்கும், திருவத்திபுரத்தில் 6 தாய்மார்களுக்கும், பெரணமல்லூரில் 124 தாய்மார்களுக்கும், தெள்ளார் 167 தாய்மார்களுக்கும், வந்தவாசியில் 171 தாய்மார்களுக்கும், வந்தவாசி நகர்ப்புறத்தில் 20 தாய்மார்களுக்கும், வெம்பாக்கத்தில் 304 தாய்மார்களுக்கும் என மொத்தம் 1590 தாய்மார்களுக்கு தாய் மாமன் தங்க மொதிரம் திட்டத்தின் கீழ் தங்க மொதிரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தின் மூலம் அரசு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரியில் 28.09.2026 முதல் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட தாய்மார்களுக்கு 213 மோதிரங்கள் வழங்கப்பட்டன, மேலும் செங்கம் மையத்தில் 47 மோதிரங்கள் வழங்கப்பட்டன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின் மூலம் பயனடைந்த தெய்வானை வீரமணி தெரிவித்ததாவது:

என் பெயர் தெய்வானை வீரமணி. நான் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டத்திலுள்ள எலங்காடு கிராமத்தில் வசித்து வருகிறேன். எனது மகள் பிரியஸ்ஸ்ரீ, நான் ஒசூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பிரசவத்திற்கான மருத்துவம் பார்த்து வந்தேன். எளிய குடும்பத்தில் பிறந்த எங்களுக்கு தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் தங்க மோதிரம் வழங்கியதற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். தங்க மோதிரம் அளித்த தமிழ்நாடு அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின் மூலம் பயனடைந்த பவானி பிரகாஷ் தெரிவித்ததாவது:

என் பெயர் பவானி பிராஷ், நான் திருவண்ணாமலை வட்டம், கீழ்நச்சிராப்பட்டில் வசித்து வருகிறேன். எனக்கு திருவண்ணாமலை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிரசவம் பார்க்கப்பட்டு சுகப்பிரவசம் மூலம் குழந்தை பிறந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் மூலம் தங்க மோதிரம் வழங்கியது எனக்கும் எனது கணவருக்கும் மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. எங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் தங்க மோதிரம் அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்தி வெளியீடு:
**B சுருளி பிரபு**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருவண்ணாமலை மாவட்டம்.**







## புழலில் நடைபெற்ற ‘மனதோடு உரையாடு’ நூல் வெளியீட்டு விழா

புதிய தலைமுறை தொலைக்காட்சி ஆசிரியர் சமஸ் ‘மனதோடு உரையாடு’ என்ற தலைப்பில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீனுடன் நடத்திய நேர்காணலை வழக்கறிஞர் புழல் எஸ்.ஏ. ஷேக் முஹம்மது அலி தொகுத்த நூல் வெளியீட்டு விழா இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலப் பொதுச் செயலாளர் கே.ஏ.எம். முகமது அபூபக்கர் தலைமையில் சென்னை புழல் காவாங்கரை ராணி சங்குபதி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் நூலை வெளியிட, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு, தமிழக சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஏ.எம். ஷாஜஹான் ஆகியோர் நூலைப் பெற்றுக் கொண்டனர்.

இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, ஜமாத்துல் உலமா சபைத் துணைப் பொதுச் செயலாளர் இலியாஸ் ரியாஜி, இந்திய தவ்ஹீத் ஜமாஅத் துணைத் தலைவர் முஹம்மது முனீர், 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் ராஜன் பரணபாஸ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநிலத் துணைத் தலைவர் கிஸர் அகமது, மாநிலச் செயலாளர் நிஜாமுதீன், துணைச் செயலாளர் இப்ராஹீம் மக்கி, MSF தேசியப் பொதுச் செயலாளர் முஹம்மது அர்ஷத், வழக்கறிஞர் அணி மாநிலச் செயலாளர் பிரோஷா ஷிபான் அன்சாரி உள்ளிட்ட தலைமை நிர்வாகிகள், திருவள்ளூர் மத்திய மாவட்டத் தலைவர் பாடி ரசூல்தீன், மாவட்டச் செயலாளர் சாதிக் பாஷா, மாவட்டப் பொருளாளர் புழல் ஹுசேன், வர்த்தகர் அணி கே. முகமது ரசாக், மாவட்ட அமைப்புச் செயலாளர் நூர் முகமது, மதிமுக மாவட்டச் செயலாளர் டி.சி. ராஜேந்திரன், விசிக மாவட்டச் செயலாளர் மாதவரம் இளங்கோவன், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட, பகுதி, வட்ட, ஒன்றியத் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், அமைப்புச் செயலாளர்கள், துணை நிர்வாகிகள், இளைஞரணி, மாணவரணி, STU, வர்த்தகர் அணி, வழக்கறிஞர் அணி, மகளிர் அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மாதவரம் தொகுதித் தலைவர் அயூப் நன்றியுரை ஆற்றினார்.

## "மதுரை கருப்பாயூரணியில் பள்ளிகள் அருகே மதுபான கடைக்கு எதிர்ப்பு" பொதுமக்கள் திரண்டு அறப்போராட்டம்

மதுரை மாவட்டம் கருப்பாயூரணி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் மற்றும் செந்தமிழ் நகர், சிந்தனையாளர் நகர், எம் பிளஸ் அவென்யூ, விக்னேஷ் அவென்யூ குடியிருப்போர் நலச்சங்க பகுதிகளில் '7 ஸ்டார் மனமகிழ் மன்றம்' என்ற பெயரில் மதுபானக் கடை / பார் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அரசு மற்றும் தனியார் பள்ளிகள் மிக அருகில் அமைந்திருக்கும் இடத்தில் இத்தகைய மதுபான கடையை அமைப்பது, தமிழ்நாடு மது சில்லறை விற்பனை விதிகள் (*Tamil Nadu Liquor Retail Vending Rules, 2003 Rule 8*) மற்றும் மதுவிலக்கு சட்ட விதிகளுக்கு முற்றிலும் எதிரான தாகும். பள்ளி மாணவர்கள், மாணவிகள் மற்றும் குடியிருப்புவாசிகள் அன்றாடம் பயன்படுத்தும் பிரதானசாலையில் மதுபான கடை இயங்குவதால், அப்பகுதியில் சட்டம் ஒழுங்கு பாதிப்பு, பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் மற்றும் சமூக சீர்கேடுகள் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல் உருவாகியுள்ளது. இதனை கண்டித்தும், மாணவர்களின் எதிர்காலத்தையும் பொதுமக்களின் அமைதியையும் கருத்தில் கொண்டு இந்த மதுபான கடை மற்றும் மனமகிழ் மன்றத்தை உடனடியாக நிரந்தரமாக மூடக்கோரியும், கருப்பாயூரணி பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பெண்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் திரண்டு 12.10.2026 காலை 9 மணியளவில் கவன ஈர்ப்பு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப. அவர்கள் இப்பிரச்சனையில் உடனடியாக நேரடியாக தலையிட்டு, விதிமுறைகளை மீறி பள்ளிகள் அருகே செயல்பட்டு வரும் இந்த மதுபான கடைக்கான உரிமத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும், கடையை முற்றிலும் மூடவோ அல்லது மாற்று இடத்திற்கு மாற்றவோ உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கருப்பாயூரணி பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் சார்பில் தீவிர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







## மக்களின் தேவைகளை நேரில் கேட்டறிந்து கிராம வளர்ச்சிப் பணிகள் தேர்வு: TN VETRI திட்டத்தில் PRA களப்பயிற்சி - திருவண்ணாமலை மாவட்டத்தில் தீவிர நடவடிக்கை

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் செயல்படுத்தப்பட உள்ள TN VETRI – தமிழ்நாடு கிராமங்கள் அதிகாரம் பெறுதல், மாற்றம் மற்றும் புத்துணர்ச்சி முன்முயற்சித் திட்டத்தின் கீழ், கிராம மக்களின் தேவைகளை நேரடியாகக் கண்டறிந்து அதனடிப்படையில் வளர்ச்சிப் பணிகளைத் தேர்வு செய்வதற்கான *Participatory Rural Appraisal (PRA)* பயிற்சி நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவுறுத்தலின்படி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக ஆய்வுக்கூட்டரங்கில் திங்கள்கிழமை (05.10.2026) நடைபெற்ற பயிற்சியில், உதவி இயக்குநர் நிலையிலான அலுவலர்கள், உதவி செயற்பொறியாளர்கள் (ஊரக வளர்ச்சி), மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், பணிமேற்பார்வையாளர்கள், மாவட்ட வளப் பயிற்றுநர் மற்றும் வட்டார வளப் பயிற்றுநர்கள் கலந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, PRA முறைகள் குறித்து மாதிரி களப்பயிற்சி துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம், கொளக்கரவாடி ஊராட்சிக்குட்பட்ட கொளக்கரவாடி குக்கிராமத்தில் நேரடியாக நடைபெற்றது.

இதில் பயிற்சி பெற்ற அலுவலர்கள் குக்கிராமத்திற்கு நேரில் சென்று பொதுமக்களுடன் கலந்துரையாடினர். அப்போது, மக்களின் அடிப்படைத் தேவைகளை நேரடியாகக் கேட்டறிதல், தேவைகளுக்கு முன்னுரிமை நிர்ணயித்தல், குக்கிராமத்தின் தேவைகளை செயல் விளக்க வரைபடம் மூலம் பதிவு செய்தல் மற்றும் அவற்றை மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட PRA நடைமுறைகள் குறித்து களத்தில் செயல்முறைப் பயிற்சி பெற்றனர்.

மேலும், 07.10.2026 முதல் 17.10.2026 வரை திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு குக்கிராமங்களில் PRA மதிப்பீடு மேற்கொள்ளப்பட உள்ளது. இதன் மூலம், பொதுமக்களின் பங்கேற்புடன் அவர்களின் தேவைகள் கண்டறியப்பட்டு, அவற்றின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகளைத் தேர்வு செய்வதற்கான நடைமுறைப் பயிற்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ.காஞ்சனா, செயற்பொறியாளர் மா.சிவநாத் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள், பொறியாளர்கள், பணிமேற்பார்வையாளர்கள் மற்றும் வள அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 14 கி.மீ. கிரிவலப்பாதையைத் தூய்மையாக்க 500க்கும் மேற்பட்டோர் களமிறக்கம்; தூய்மையான திருவண்ணாமலை திட்டத்தைத் தொடங்கி வைத்தார் ஆட்சியர் வந்தனா கார்க்

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் கிரிவலப்பாதையைத் தூய்மையாகப் பராமரிக்கும் நோக்கில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி இணைந்து முன்னெடுத்துள்ள ‘தூய்மையான திருவண்ணாமலை’ (*Clean Tiruvannamalai*) திட்டத்தை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகிலுள்ள மாட்டுச் சந்தை மைதானத்தில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியைத் தொடர்ந்து, 14 கி.மீ. நீளமுள்ள கிரிவலப்பாதையைத் தூய்மைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு வெளிநாடுகள், வெளிமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து சுவாமி தரிசனம் செய்து கிரிவலம் செல்கின்றனர். இதனால், கிரிவலப்பாதை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உருவாகும் குப்பைகளை அகற்றி, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் இத்தூய்மைப் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்ச்சியில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள், ஆந்திரா, கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களைச்




சேர்ந்த தன்னார்வலர்கள், பக்தர்கள், சிவனடியார்கள் மற்றும் வெளிநாட்டினர் என 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இவர்கள் ஏழு குழுக்களாகப் பிரிந்து கிரிவலப்பாதையின் பல்வேறு பகுதிகளில் தூய்மைப் பணிகளை மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்துப் பேசிய மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் மற்றும் கிரிவலப்பா தையில் சேரும் குப்பைகளை மாநகராட்சி சார்பில் நாள்தோறும் அகற்றும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து தன்னார்வலர்கள் மற்றும் பக்தர்கள் பங்கேற்கும் வகையில் ‘தூய்மையான திருவண்ணாமலை’ நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் கிரிவலப்பாதையைத் தூய்மைப்படுத்துவதுடன், பொதுமக்களிடையே சுற்றுப்புறத் தூய்மை குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்த முடியும். பக்தர்கள், பொதுமக்கள் என அனைவரும் தங்களது சுற்றுப்புறத்தைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும். குப்பைகளை ஆங்காங்கே வீசுவதைத் தவிர்த்து, திருவண்ணாமலையின் தூய்மையைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், மாநகராட்சி ஆணையர் பாலசுப்பிரமணியன், தன்னார்வலர்கள் ஒருங்கிணைப்பாளர் வடிவேல், மகரிஷி வித்யா மந்திர் பள்ளி முதல்வர் அனிதா ராம், பல்வேறு தன்னார்வ அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இறப்புக்கு முன் ரத்த தானம்**
**இறப்புக்கு பின் கண் தானம்**

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA